**பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - B**

**2024-09-22**

(*இன்றைய வாசகங்கள்:*

*சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம்:* 2:12,17-20,

*பதிலுரைப்பாடல்: திபா.* 54:1-4,6 ,

*திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்:* 3:16-4:3 ,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:* 9:30-37 )

*திருப்பலி முன்னுரை*

*அன்புக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் பணிவுடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு கடவுளுக்கு உகந்த பணியாளர்களாக வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறது. எத்தனை இடையூறுகளும், துன்பங்களும் வந்தாலும் எப்பொழுதும் பிறருக்கு நன்மை செய்பவர்களாக செயல்பட நாம் அழைக்கப்படுகிறோம். நீதிமான்களுக்கு எதிராக எத்தனை பேர் சூழ்ச்சி செய்தாலும் கடவுள் அவர்களுக்கு துணை நிற்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். நம்மில் இருக்கும் தீய நாட்டங்களுக்கு இடம் கொடுக்காமல், இயேசுவைப் போன்று கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர்களாய் வாழ நாம் அழைப்பு பெற்றுள்ளோம். நம்மில் யார் பெரியவர் என்ற போட்டியில் நம்மை இழந்துவிடாமல், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும் பணியாளர்களாக செயல்படும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பின் இறைவா!*

*எம் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது இரக்கத்தையும், மன்னிப்பின் மாண்பினையும் உணர்ந்தவர்களாய் உமது பாதையில் வழிநடக்க வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்போடு வாழப் பணித்தவரான இறைவா!*

*எங்களையும் உம்மைப்போல் பிறருக்குப் பணிவிடை புரிந்து வாழ்பவர்களாக மாற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் தெய்வமே இறைவா!*

*உமது தலைமைப் பண்பு சீடர்களின் பாதங்களைக் கழுவியதில் காணப்பட்டது போல, நாங்களும் தாழ்ச்சியுடையவர்களாக எளிய மனநிலையோடு வாழும் வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தாழ்ச்சியின் இறைவா!*

*துன்பத்தில் இன்னல்களில், வறுமையில் வாழும் மக்களுக்காக நமது வாழ்வை, திறமைகளை, செல்வங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனநிலை தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*சிறுபிள்ளைகளை அதிகமாக அன்பு செய்த இறைவா!*

*சிறுபிள்ளைகளை நீர் எவ்வளவு அன்போடு அரவணைத்துப் பாதுகாக்கின்றீரோ அதே போல, நாங்கள் சிறுபிள்ளைகளின் நலனில் அக்கறையுடையவர்களாக வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்பங்களை நீக்குபவராம் இறைவா,*

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும் அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*